செய்தி வெளியீடு எண்: 005 நாள்: 03.01.2010

<u>செய்திக்குறிப்பு</u>

அரசுப் பேருந்து ஓட்டுநர்கள் பேருந்தை இயக்கிக்கொண்டே கைபேசியில் பேசுவதாகவும் அதனால் பேருந்துகள் விபத்திற்குள்ளாவதற்கு காரணமாக உள்ளன எனவும் பல புகார்கள் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. எனவே அரசுப் பேருந்து ஓட்டுநர்கள் பணியிலிருக்கும் போது கைபேசியை எடுத்து செல்லக்கூடாது எனவும், பேருந்து பரிசோதகர்கள் அதனை கண்காணிக்கவும் அரசு உத்தரவிட்டுள்ளது. அனைத்து போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்களும் அரசின் உத்தரவினை முழுமையாக நடைமுறைப் படுத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஓட்டுநர்கள் பேருந்தை வழித்தடத்தில் இயக்க செல்லும் முன்பு அவர்கள் கைபேசியை உடன் எடுத்துச் செல்லாதவாறு போக்குவரத்து மேற்பார்வையாளர்கள் மூலம் கண்காணிக்க அனைத்துப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும், பயணிகளின் பாதுகாப்பு கருதியும் மற்றும் அனைவருடைய பாதுகாப்பை முன்னிட்டும் ஓட்டுநர்கள் நிர்வாகத்துடன் ஒத்துழைக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பணியின்போது தன்வசம் கைபேசியை எடுத்துச்செல்லும் ஓட்டுநர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என அனைத்துப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஒம்/-
அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப,
அரசு செயலர்,
போக்குவரத்துத்துறை.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—9.